தரப்பட்டிருக்கிறது. மீதி இருக்கிற 85, 86 கிராமங்களுக்குத் தர வேண்டும். அதைக் கூட உடனடியாக கொடுப்பதற்கு மின்சார வாரியம் தயாராக இருக்கிறது. ஆனால் இடையிலே ஒயர்களை இணைத்துச் செல்வதற்கு காட்டு இலாகா அனுமதி கொடுக்கவில்லை. மரத்தை கட் பண்ண வேண்டுமென்றால் காட்டு இலாகாவினுடைய அனுமதி தேவை. நாங்களும் பல முறை அவர்களோடு மன்றாடிக் கொண்டிருக்கிறோம். நீங்கள் எவ்வளவு ஆர்வத்தோடு கேட்கிறீர்களோ அதே ஆர்வத்தோடு அந்த மக்களுக்கு மின் இணைப்பு தர வேண்டும் என்று தான் நாங்கள் செய்கிறோம். ஆனால் அந்த வன இலாகாவினுடைய அனுமதி கிடைக்காததால் தாமதம் ஏற்பட்டிருக்கிறதே ஒழிய மின் இலாகாவினால் அல்ல.

திரு. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொல்லிமலையில் சில கிராமங்களில் சூரிய ஒளி விளக்கு அமைக்கப்பட்டுள்ளது. அங்கு ஒரு விளக்கு கூட எரிவது இல்லை. ஆகவே அந்த விளக்குகளை அகற்றி விட்டு மின்சார விளக்குகளை அமைக்குமாறும் ஊராட்சி மன்றங்களின் மூலமாக தெரு விளக்குக்காக மின்சார வாரியத் திற்கு பணம் கட்டி பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. இந்த நிலையை மாற்றி குறிப்பிட்ட நாளுக்குள்ளாக தெரு விளக்குகளை அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அங்கு சூரிய ஒளி மூலம் மின் விளக்கு கொடுக்கப்பட்டிருப்பது டெம்பரரியான ஒன்று தான். நாங்கள் கம்பிகளை இழுத்து மின்சார வாரியத்தின் மூலமாகத்தான் அங்கு விளக்கு கொடுக்க வேண்டும் என்று இருக்கிறோம். அதுவரையில் அவர்கள் விளக்கு இல்லாமல் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் சூரிய ஒளி மூலம் அந்த விளக்குகளை அங்கே அமைத்திருக்கிறோம். காட்டு இலாகாவின் அனுமதி கிடைத்தவுடன் உடனடியாக அந்தப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படும்.

டான்சி தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு.

*9366 திரு. ஆர், எஸ், ஸ்ரீதர் :

*திரு, குமரி அனந்தன் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் உள்ள டான்சி தொழிலாளர்களுக்கு ஐந்தாவது சம்பள கமிஷன் சம்பள உயர்வு அமுல் செய்யப் பட்டதா ?

(ஆ) இல்லையெனில், எப்பொழுது அமுல் செய்யப்படும் ?

1990 ஏப்ரல் 17]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): டான்சி ஊழியர்களுக்கு ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி ஊதியம் வழங்குதல் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் ; மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, கழகத்தலைவர் கலைஞர் அவர்கள் கடுமையான சூழ்நிலையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு மத்திய அரசுக்கு சமமான ஊதியத்தை அரசு வழங்கியும், அரசினுடைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டும் கூட டான்சி தொழிலாளர்களுக்கு மட்டும் ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையை, ஊதிய உயர்வினைக் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வர் அவர்கள் ஆணையிட்டும் அரசு அதிகாரிகள் வழங்கவில்லை என்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்; மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிறுவனங்களில் ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை எவ்வாறு அமல்படுத்துவது என்ற விரிவான வழிமுறைகளை அரசு 1–8–1989படி அரசு ஆணை எண் 802, நிதி துறை மற்றும் 1989ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5-ம் ஆம் நாளிட்ட அரசு ஆணை எண். 985 நிதித் துறை ஆகியவற்றின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி அரசின் சார்பு நிறுவனங்களில் இயக்குநர் குழுமத்தின் முன்பு அரசு ஆணைகள் சமர்ப்பிக்கப்பட்டு சம்பள விகிதங்களின் மாற்றம் மற்றும் அமல் குறித்து அந்நிறுவனங்களின் பொருளாதார நிலைமையைக் குறிப்பாக கருத்திலே கொண்டு விரிவான ஆலோசனை செய்து நிறுவனத்தின் செயல்பாட்டில் உடனடியாக தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் அந்த சம்பள விகித மாற்றம் அவசியம் தேவைதான் என்று கருதினால் அந்த இயக்குநர் குழு அரசுக்கு பரிந்துரைசெய்ய வேண்டும் என்று தான் அரசு உத்திரவிட்டிருக்கிறது. அந்த உத்திரவின் அடிப்படையிலேதான் டான்சி இயக்குநர் குழு அரசுக்கு தன்னுடைய பரிந்துரையை வழங்கியிருக்கிறது.

10.05 மணி

திரு. குமரி அனந்தன் ; சபாநாயகர் அவர்களே, அந்தந்த அரசு சார்புள்ள நிறுவனங்களில் பொருளாதார நிலைக்கு ஏற்பவே முடிவு செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் தமிழ்நாடு அரசின் கீழ் உள்ள பொதுத் துறை நிறுவனங்களிலே 63-ல் 61 நிறுவனங்

களுக்கு ஐந்தாவது நிதிக் குழுவின்படி ஊதியம் கொடுக்கப் பட்டுவிட்டது. ஆக ஐந்தாவது ஊதியக் குழுவின்படி நஷ்டத்தில் ஓடுகின்ற பொதுத் துறை கூட பெறுகின்ற நேரத்தில் இந்த டான்சி மட்டும் பெறாமல் இருப்பதற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே டான்சி நிறுவனம் கடுமை யான நிதி நெருக்கடியில் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 24 கோடி ரூபாய் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக் கின்ற காரணத்தினாலும் சமீபத்திலேதான் அவர்களுக்கு 2 அகவிலைப்படிகளை டான்சி நிறுவனம் நடைமுறைக்கு கொண்டு வந்திருப்பதன் காரணமாகவும் இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

சேலத்தில் மருத்துவக் கல்லூரி

*** 2111 திரு. கே. ஆர். ஜி. தனபாலன் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலத்தில் மருத்துவக்கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: துணைத் தலைவர் அவர்களே

ஆம்

திரு. கே. ஆர். ஜி. தனபாலன் ; துணைத் தலைவர் அவர்களே, சேலத்தில் மருத்துவக் கல்லூரி இந்த ஆண்டு அமைக் கப்படுமேயானால் அதற்கான இட ஒதுக்கீடு கையகப்படுத்தப் பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : துணைத் தலைவர் அவர்களே, சேலம் மருத்துவக் கல்லூரியை சேலத்திலே நடத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த ஆண்டு முதலாம் ஆண்டு படிப்பினை அங்கே துவங்கு வதற்காக அங்கே இருக்கின்ற கூட்டுறவு பண்டக சாலையினுடைய கட்டிடத்தை அரசு கேட்டுக்கொண்டு இருக்கிறது. அதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கட்டிடப் பணி களும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கட்டிடப் பணிகள் முழுமையாக நடைபெற்று முடிந்தவுடன் அங்கே அந்த வகுப்புகள் துவங்கப்படும். அதுவரையில் இடைக் காலமாக முதலாம் ஆண்டு வகுப்புகளை மட்டும் கூட்டுறவு